[28th January 1961]

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes, Sir.

(*b*) Thirty scholarships each of the value of Rs. 36 per annum are given to Eligible Community students including Scheduled Caste students taking up commercial courses such as Book-keeping, Shorthand and typewriting.

SRIMATHI A. S. PONNAMMAL : டைப்ரைடிங் லோயர் கிரேடு பரீட்சை தேறவேண்டுமென்றால், அதற்கு ஆறு மாத காலம் பயிற்சி பெறவேண்டும். பள்ளிக்கூடப் படிப்பிற்குப் பிறகு, டைப்ரைடிங்குக்காக ஆறு மாத காலம் பயிற்சி பெறும் போதும் போர்டிங் சார்ஜ் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI P. KAKKAN : போர்டிங் சார்ஜ் கொடுப்பதைப் பற்றி இங்கே குறிப்பிடப்படவில்லை. என்றாலும், டைப்ரைடிங் பயிற்சி பெறக்கூடிய ஆறு மாத காலத்திற்கு மாதம் 15 ரூபாய் வீதம் ஷெட்யூல்டு வகுப்பு மாணவனுக்குக் கொடுப்பது நல்லது என்று ஹரிஜன நல இலாகா டைரக்டர் அவர்கள் ஸிபார்சு செய்திருக்கிறார்கள்.

SRI N. MARUDACHALAM : ஹரிஜனங்களுக்கு போன வருஷம் கொடுக்கப்படவேண்டிய ஸ்காலர்ஷிப் பணம் கொடுக்கப் படவில்லையே. . .

MR. SPEAKER : கேள்வி குறிப்பாக டைப்ரைடிங் கற்றுக் கொள்ள உதவி செய்வது பற்றியது. . . பொதுவாகக் கேட்கக் கூடாது.

SRI T. S. RAMASWAMI : முப்பத்தாறு மாணவர்களுக்கு உதவி செய்யப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். முப்பத்தாறு என்ற எண்ணிக்கை லிமிட் செய்யப்பட்டிருக்கிறதா ? அல்லது இந்த உதவித் தொகை கோருகிறவர்களுக்கு எல்லாம் அளிக்கப்படுமா ?

THE HON. SRI P. KAKKAN : நான் 30 பேர்களுக்கு என்று சொன்னேன். முப்பத்தாறு என்று சொல்லவில்லை. முப்பது பேர்களுக்கு முப்பத்தாறு முப்பத்தாறு ரூபாய் என்று உதவி அளிக்கப்படுகிறது.

MR. SPEAKER : மணி 11 ஆகிவிட்டது. இன்னும் ஒரு ஐந்து நிமிடங்கள் எடுத்துக்கொண்டு எல்லாக் கேள்விகளையும் முடித்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். அடுத்த கேள்வி 235. 11-00 a.m.

### *Irrigation Channel*

*235 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தாலுகா 65-ம் நெ. பிராந்தியக்கரை வட்டத்தில் பாயும் வாய்க்காலை அடைத்து சிறு மிராசுதார் களுக்குத் தண்ணீர் பாய விடாமல் அவ்வூரிலுள்ள பெரிய

மிராசுதார்கள் தடைசெய்து வருவதாக அரசாங்கத்திற்குப் புகார் வந்திருக்கிறதா? அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes. Sir, The Chief Engineer (Irrigation), Madras, who was consulted, has reported that the timely intervention of the lower down ryots of the Piranthiyankarai channel averted the attempt made to cross bund the channel by the ryots in the upper reaches. The Collector of Thanjavur has also been instructed to prevent any cross bunds in the upper reaches of the channel in future.

SRI A. VEDARATHNAM : இந்தமாதிரி பெரிய மிராசுதார்கள் அந்த ஆற்றைக் குறுக்கே தடுத்து அணை போட்டு சில்லரை மிராசுதார்களுக்குத் தண்ணீர் பாய்வதற்கு வசதி இல்லாமல் செய்துவிடுகிறார்கள். இதற்குமுன் எத்தனையோ முறை அரசாங்கத்தினிடம் புகார் செய்யப்பட்டும் இது நிறுத்தப்படவில்லை. ஆகவே இதுபோல் இனி நடக்காமல் இருக்கப் பார்த்துக்கொள்வார்களா? அல்லது போதுமான அளவுக்குத் தண்ணீர் விடுவதற்காவது வசதி செய்யப்படுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்தச் சம்பவத்திற்குக் காரணம் சின்ன மிராசுதார்களா, பெரிய மிராசுதார்களா என்று எனக்குத் தெரியாது. ரயத்துகள் என்றுதான் இங்கே இருக்கிறது. இந்தமாதிரி நடைபெறக்கூடாது என்று கலெக்டருக்கு உத்தரவு அனுப்பப்பட்டிருக்கிறது. இதன் நகலும் பிரதம எஞ்ஜினியருக்குப் போயிருக்கிறது. ஆகையால் இதுமாதிரி நடக்காது என்று சொல்கிறேன்.

*Tube wells*

*236 Q.—SRI S. M. ANNAMALAI : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1960-ல் வடாற்காடு மாவட்டத்தில் ஆற்றுநீர்க் குழாய் கிணறுகள் (Tube wells) எங்கெங்கே தோண்டப்படும்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A river pumping scheme at Kadalady village on Cheyyar river is under investigation by the Agriculture Department. No such schemes are under the consideration of the Public Works Department.

SRI S. M. ANNAMALAI : இந்த ரிவர் பம்பிங் ஸ்கீம் வடாற்காடு ஜில்லாவில் அதிகமாக ஏற்படாததற்குக் காரணம் பாலாறு பேசின் ரூல் என்கிற விதி அமுலில் இருப்பதுதான். அந்த ஜில்லா வளம் பெறுவதற்கு வேறு எந்தவிதமான வசதியும் இல்லாத காரணத்தினால் இந்த பாலாறு பேசின் ரூலை அடியோடு ரத்து செய்வதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா?